பொதுசன நூலகம்
உடனுதவும் பகுதி
23-8-1991
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# மட்டு. கண்ணிவெடி தாக்குதலில் 12 ராணுவம் பலி

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆவணி 7 | இதழ்: 193
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 23-8-1991

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 12 சிறிலங்கா இராணுவத்தினர் பலியானார்கள்.
கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் மட்டக்களப்பு 36ம் கிராம
(4-ம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டிற்கு பலத்த பாதுகாப்பு

[கொழும்பு]
கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டில் புலிகளின் எந்தவித அச்சுறுத்தலையும் தவிர்க்க சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. தலைவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
கழுத்துறை ஜே. வி. பி. தலைவர் சுதர்சிங்க கடந்த
(4-ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான முயற்சியை அரசு மேற்கொள்ளாது

# போரா? சமாதானமா? என்று புலிகள் அறிவிக்க வேண்டும்!

### - அமைச்சர் ரணில் அறிவிப்பு -

(கொழும்பு)
அரச படைகளுடன் தொடர்ந்தும் யுத்தம் புரிவதா அல்லது அரசுடன் சமாதானப் பேச்சு நடாத்த இணக்கமா என்று புலிகள் அறிவிக்க வேண்டும் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் திரு: ரணில் விக்கிரமசிங்க இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிக்கையில்:-
புலிகளுடன் பேச்சு
[4ம் பக்கம் பார்க்க]

## தமிழ் அகதிகளால் சிறையில் நெருக்கடி

(சென்னை)
இலங்கைதமிழ் அகதிகளால் தமிழக சிறைகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அரசு தெரித்துள்ளது.
தமது பெயர்களை பதிவு செய்யத் தவறிய அகதிகள் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு வருகிறார்கள். இதனுல் சிறைகளில பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.
இவர்களை நாடுகடத்துவதா இல்லையா என ஆராயப்பட்டும் வருகிறதாம். (சி)

அடுத்தமாதம் 1-ம்திகதி முதல்

## ஜனசக்தி, உணவுமுத்திரை திட்டங்கள் மீண்டும் அமுல்

[யாழ்ப்பாணம்]
ஜனசக்தித் திட்டமும், உணவு முத்திரைத் திட்டமும் அடுத்த மாதம் 1-ஆம் திகதி முதல் யாழ். மாவட்டத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
அகதிகளுக்கெனக் கடந்த பல மாதங்களாக வழங்கப்பட்டுவந்த இலவச உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.
(4ம் பக்கம் பார்க்க)

## 300 புலிகளுடன் கைக்கு கை மோதினேம்

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாம் மீதான முற்றுகைப்போரில் ஒருகட்டத்தில் 300 புலிகளுடன் நேரடியாக படையினர் கைகலப்பில் ஈடுபட்டதாக மேஜர் ரோஷன் சில்வா தெரிவித்துள்ளார்.
ஆனையிறவு முகாமில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனைத்
(4-ம் பக்கம் பார்க்க)

## 3 புலிகளை தேடி கொழும்பில் வலைவீச்சு

(கொழும்பு)
கொழும்பில் மீண்டும்குண்டு வெடிக்கலாமெனவும் கொழும்புநகருக்குள் வந்துள்ள புலிகளை பிடிக்க படையினர் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.
மூவர் அடங்கிய புலிகளின் குண்டுவெடி நிபுணர் குழு கொழும்பு நகரின் ஏதாவதொரு பகுதியில்தான் இருக்கிறது. அவர்களை பிடிக்க படையினர் முயன்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மூலம்

## ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணப்படவேண்டும்

(புதுடில்லி)
இலங்கைத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தியாக்கும் வகையில் இலங்கை தமிழர் பிரச்னைக்கு பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காணவேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் திரு: மாதவ்சிங் சோலங்கி தெரிவித்துள்ளார்.
மக்களவையில் இதனை தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,
இந்தியாவிலுள்ள அகதிகள் சுயவிருப்பின்பேரில் இலங்கை திரும்புவதற்கு தேவையான சூழ்நிலையை உருவாக்குமாறும் இந்தியா இலங்கை அரசை கேட்டுள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் பாதுகாப்பிற்கு தமிழ் அகதிகள் அச்சுறுத்தல்

(புதுடில்லி)
இந்தியா வரும் இலங்கை தமிழ் அகதிகளால் இந்தியாவின் பாதுகாப்பு சூழ்நிலை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. மாதவ் சிங் சோலங்கி தெரிவித்துள்ளார்
மக்களவையில் நேற்று எழுத்து மூல வினவொன்றிற்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;
ஏராளமான இலங்கை தமிழ் அகதிகள் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளனர். மேலும் பலர் வந்த வண்ணமுள்ளனர். இது இந்தியாவின்
[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளை நாடுகடத்துவதா? இந்தியாவிற்கு சிக்கல்

(சென்னை)
தமிழகத்தின்பல்வேறு சிறைகளிலும் வைக்கப்பட்டுள்ள 500 புலிகளை நாடுகடத்துவதா அல்லது தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பதா என்பது குறித்து மத்திய, மாநிலஅரசுகள் முடிவெடுக்கமுடியாததொரு நிலையிலுள்ளன.
சிறைகளிலுள்ள புலிகளால் பிரச்னைகள் எழக்கூடுமென அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். பாதுகாப்பு காரணம் கருதியாவது இவர்களை நாடுகடத்த வேண்டுமென
[4-ம் பக்கம் பார்க்க]

## பகுதிநேர அடிப்படையில் ஆங்கில ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)
பகுதிநேர அடிப்படையில் ஆங்கில உதவி ஆசிரியர்களை நியமிப்பதற்கு யாழ். கல்வித் திணைக்களம் ஈடுபடவுள்ளது.
இது தொடர்பான அறிவித்தல்கள் யாழ். கல்விப் பணிப்பாளரால் யாழ் மாவட்டத்தில் உள்ள கோட்டக் கல்வி
[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### புதிய நாவல்கள்

''வெள்ளை மடிக்கப்பட்ட கல்லறை'' ''ஆறுகள் பின்னோக்கிப்பாய்வதில்லை'' கே. ஆர். டேவிட் எழுதிய இந் நாவல்கள் பத்திரிகைகளில் தொடராக வெளிவந்தபோது வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றவை நூலாக வெளிவந்துள்ளது. (சி-5146)

### மணமகள் தேவை

யாழ் இந்து பெற்ரோர் சைவ போசன 29 வயது ஆசிரிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகளை எதிர் பார்க்கின்றனர். நட்சத்திரம் சித்திரை தொடர்பு விளம்பர இல. சி 5161 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம்
[சி 5161]

### தவறிவிட்டது

வ வைகுந்தராஜா ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 520263284V சங்குப்பிட்டியில் இருந்து பூநகரி பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நீரோஜா தேநீர்ச்சாலை, சங்குப்பிட்டி அல்லது வை. சுசிலா, கட்டுமேய்ச்சல் கரம் பன்குறிச்சி, வாணி எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி 5159)

மீனும்பிகை ஜவுளி சமுத்திரம் என்று எழுதப்பட்ட திறப்புக்கோர்வை கஸ்தூரியார் வீதிக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில் 21-08-91 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5162)

### ஓவியங்கள் விற்பனைக்கு

பிரபல இந்திய ஓவியர்களின் வண்ணப்படங்கள், Gabriele Typewriter (2,500/-), சொப்பர் சைக்கிள் (1,500/-), கருணாநிதியின் குறளோவியம், கல்கியின் பொன்னியின் செல்வன், காதல் ஆகிரியரின் வீரத்தேவன் தில்லானுமோகனும்பாள், பக்தி நூல்கள், கலைமகள், மஞ்சரி தொகுப்புக்கள், Readers digest Condenced Volumes, Wolsey Hall Oxford Correspondence Courses, Miracle of Life (Useful for Medical Student), Spy Stories, Cardboard File Cases விற்பனைக்கு. வேலுப்பிள்ளை 40, நாவலர் றோட் (ஐந்து சந்திக்கு அருகாமையில்.) (5147)

### முதலுதவி சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம்செயற்படவுள்ளது.

## உப்பு தட்டுப்பாடு நீங்கியது

(பூநகரி)

பூநகரி பகுதியில் உப்பிற்கு இருந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது இப்பகுதியில் உள்ள ஆரியம் பொந்து, உப்புகளப்பு, கறுக்காய்த்தீவு, இராமன் களப்பு ஆகிய பகுதிகளில் போதியளவு உப்பு விளைந்துள்ளது.

இதேவேளை தங்களுக்குத் தேவையான உப்பை களப்புகளுக்கு சென்று சாக்கு, உரப்பை, கடகம் போன்றவற்றில் தினந்தோறும் 500க்கு மேற்பட்ட மக்கள் அள்ளுவதை அவதானிக்கமுடிகிறது.

[23]




நவாலியூர் முருக மூர்த்தி கோவில்

இன்று மாலை 4-00 மணிக்கு

பெரிய சப்பறத் திருவிழா நடைபெறும்

முருகனின் பேரருளைப்பெற்று உய்வீர்களாக.

உபயகாரர்கள்.

(சி-5166)



நவாலியூர் முருகமூர்த்தி கோவில்

தேர்த்திருவிழா 24-08-91 சனி காலை 9-00

திருமுருகனின் பேரருளைப் பெற்றுய்யுங்கள்

யோகாஸ் ஆடை அகம்

16 பெரிய கடை யாழ்ப்பாணம்

(சி-5166)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## ஜாம் (JAM) போத்தல்கள் தேவை

ஜாம, சோஸ் போத்தல்கள் (JAM, SAUCE BOTTLES) விலை ரூ. 3/-க்கு குறையாமல் கிழமை நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும்.

**TASTE LINE INDUSTRIES (Pvt) LTD**

NO. 14, சினியர் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

[தட்டாதெருச் சந்தியிலிருந்து அரசடி வீதியால் நல்லூர் நோக்கிச் செல்லும்போது இடது பக்கம் வரும் முதல் ஒழுங்கை.]

(சி-5164)


## முதலாமாண்டு நினைவஞ்சலி

நாரந்தனையூர்

சண்முகம்பிள்ளை அமிர்தலிங்கம்

| | |
|---|---|
| பெற்றவர் மடியில்: | அன்னியர் அழிப்பு: |
| 12-07-1963 | 24-08-1990 |

கூப்பிட்ட குரலுக்கு அண்ணே என்பாயே!
குழந்தையுள்ளத்துடன் குசலம் விசாரிப்பாயே!!
குலவிளக்காய் குத்துவிளக்காய் வாழ்ந்தாயே!
வள்ளலுக்கு இலக்கணமாய் வாரிவழங்கினையே!!
சுகம் அனைத்தையும் சுற்றத்துக்கு ஈந்தாயே!
ஐயோ ... நெஞ்சம் வெடிக்க இதயம் கதற,
எங்கு சென்றாயோ ... யார் அறிவர்!!
கல்நெஞ்சம் கொண்டவர்க்கு ஏன் ஐயா
இந்த அவசரம் ... எதற்காக இந்த முடிவு!
காலம்தான் உருண்டு விட்டது ஐயா...
ஆத்மா சாந்திபெற அனைவரும்,
ஓம் சாந்தி ... ஓம் சாந்தியென பிரார்த்திப்போம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள், அத்தார்,
மருமகள். சுற்றத்தார், நண்பர்கள்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

(சி-5080)

### இலவசம்

(யாழ்ப்பாணம்)

பயன்மிகு இலவம் பருத்தி விதை தேவைப்படுவோர் முத்திரை ஒட்டி சுயவிலாசமிட்ட அஞ்சல் உறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிற்சாலை அதிபர் தெரிவிக்கிறார்.

### கல்விக் கண்காட்சி

(உடுவில்)

மூன்றும் தவணைக்காலத்தில் கொத்தணி ரீதியிலான கல்விக் கண்காட்சியொன்றினை நடாத்த மருதனார்மடம் கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தனஞ்செயன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். [109]


# NEWSCIENCE ACADEMY

## JAFFNA

92 A/L புதிய பிரிவுகள்

### PHYSICS

சோதிலிங்கம் B. Sc.

| | | |
|---|---|---|
| HEAT | Sat., Sun. | 1-00—2-00 |
| MECHANICS | Sat., Sun. | 3-00—4-00 |

### ELECTRICITY

| | | |
|---|---|---|
| பிரிவு I | Tue. | 4-00—600 |
| பிரிவு II | Wed. | 4-00—6-00 |

### CHEMISTRY

மணியம் B. Sc.

| | | |
|---|---|---|
| IN-ORGANIC | Sat. Sun. | 2-00—3-00 |
| THERMO | Sat. Sun. | 4-00—5-00 |

### ZOOLOGY

தம்பிராஜா B. Sc.

| | | |
|---|---|---|
| EMBROLOGY | Sat. Sun. | 12-00—1-00 |
| CIRCULATORY SYSTEM | Sat. Sun. | 1-00—2-00 |

### PHYSICS

| | | |
|---|---|---|
| ELECTRICITY | Sat. Sun. | 6-35—7-30 |

கணேசன் B. Sc. (Engi.)

ஆரம்பம்: 24-08-91

(ஏ-1525)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் தம்பு தருமலிங்கம்

| | |
|---|---|
| அன்னை மடியில்: | ஆண்டவன் மடியில்: |
| 06-06-1932 | 24-07-1991 |

ஆலமரமென நீயிருந்தாய் அதனால்
காலமெலாம் எமைக்காத்திருப்பாய் என்றிருக்க
காலனவன் கவர்ந்து சென்றானே - இதனால்
பாலை வனமானதே எம் வாழ்வு

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 23-08-1991 வெள்ளிக்கிழமை நிகழவிருப்பதால் அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அன்றைய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

''திருவேலகம்'.
சண்முகம் வீதி,
சாவகச்சேரி.

(எ-1522)

# கூட்டெரு தயாரித்தல்

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவித்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். எரிபொருள் தடை, விளைபொருட்களை உரியகாலத்தில் விற்க முடியாமை போன்ற தடைகளுடன் இரசாயன வளமாக்கிப் பற்றுக்குறையும் ஒன்றாகும். எனவே இத்தடையில் இருந்து விலகி பசுமைப்புரட்சி கண்டு வேளாண்மையில் வெற்றிநடை போட கூட்டெரு தயாரிப்பு முறை முக்கியத்துவமான ஒன்றாகக்காணப் படுகின்றது.

கூட்டெரு என்றால் பண்ணைக்கழிவுகள், சந்தைக்கழிவுகள், சமயலறைக் கழிவுகள் (எரு, சிறுநீர், கோழிஎச்சம்) இலைகுழை, சாம்பல் முதலிய கழிவுப் பொருட்களை ஓர் திட்டமிட்ட முறையில் படைபடையாக இட்டு உக்கலாக்குதல் ஆகும்.

கூட்டெரு தயாரிப்புமுறை பல இருந்தபோதிலும் முக்கியமாக கையாளப்படும் இரண்டு உள்ளன. அவையாவன குழிவுமுறை, குவிவு முறை.

மழைவீழ்ச்சி அதிகமுள்ள பகுதியில் குவிவு முறையில் கூட்டெரு தயாரிக்கப்படும். ஆனால் யாழ்ப்பாணம் போன்ற மழைவீழ்ச்சி குறைந்த இடங்களுக்கு குழி முறையே சிறப்பானது.

தயாரிப்பு:

கிடைக்கும் கழிவுப்பொருட்களுக்கு ஏற்றவாறு நீள அகலத்தில் குழிகள் வெட்டப்பட வேண்டும். குழியின் ஆழம் 60 ச.மீ.- 90 ச.மீ. வரை இருத்தல் வேண்டும் குழியின் பக்கம் 45 பாகை சரிவாக அமையவேண்டும். அடித்தளமும் சரிவாக இருத்தல் வேண்டும்; எமக்கு கிடைக்கக்கூடிய பொருள்களில் பொலித்தீன், சிரட்டை போன்ற உக்க முடியாத பொருட்களை அகற்றி பின் தடிப்பான கழிவுகளை சிறுசிறு துண்டாக வெட்டி அடியில் இடவேண்டும். அதன் மேல் விலங்குக் கழிவுகளை இட்டு அதன் மேல் சாணக் கரைசலோ சாணம் சேர்ந்த சிறுநீர். உக்கிய கூட்டெரு சேர்ந்த கரைசலை ஊற்ற வேண்டும். இது உக்கலைக் கூட்டும். மேற்படையாக தாவரக் கழிவுகள் விலங்குக் கழிவுகள் போன்றவற்றை படை படையாகப் போட்டு மேற்கூறிய கரைசலை ஊற்ற வேண்டும். குழி 10 நாட்களில் நிரப்பட வேண்டும். குழியின் ஒருபக்கம் வெளியாக விடப் படவேண்டும். இது புரட்டுவதற்கு இலகுவாகவிருக்கும்.

நிரப்பிய குழி 2ம், 4ம், 8ம் வாரங்களில் புரட்டவேண்டும். ஈரலிப்பை பாதுகாக்க அடிக்கடி நீர் தெளித்தல் வேண்டும். மூன்றும்முறை புரட்டி ஒரு மாதம்வரை உக்கவிட்டு பின் பசளையாக உபயோகிக்கலாம்.

இத்தயாரிப்பில் முதலில் பங்கசுத் தாக்கமும் பின் பற்றீரியாத் தாக்கமும் நடைபெறுவதால் வெப்பநிலை 140 பாகை பரனைட வரை உயரும். இதனால் களை விதைகளும், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளும் அழிக்கப்படுகின்றது.

இவ்வாறு எமக்கு கிடைக்கும் கழிவுகளை சிறந்த இயற்கைப் பசளையாக்கி வளமாக்கித் தட்டுப்பாட்டை வெற்றிகரமாக தீர்ப்பதுடன் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க முடியும்.

திருமதி ஜெயந்தி சிதம்பரநாதன்.

## திருட்டு முயற்சி தோல்வி

(பண்டத்தரிப்பு)

இரவுவேளையில் வீட்டில் தனித்திருந்த வயோதிப மாது ஒருவரின் பவுண் தோடுகளை அபகரிக்க முயன்ற திருடன் ஒருவன் அது பலிக்காது போகவே அந்த வயோதிப மாதின் காதை படுகாயப் படுத்திவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் மாதகலில் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளது.

இவருக்கு காதில் ஏற்பட்ட படுகாயத்திற்கு மாதகலிலுள்ள தனியார் வைத்திய நிலையமொன்றில் மூன்று தையல் போடப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. [72]

## தேர், தீர்த்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இணிங்கித் தோட்ட முத்துக்குமாரசுவாமி கோயில் தேர், தீர்த்த உற்சவம் எதிர்வரும் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

# சுதந்திரக் கட்சி உறுப்பினர் தெரிவுக்குழுத் தலைவர்

(கொழும்பு)

இனப்பிரச்சனை தீர்வு குறித்து நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு மங்களமுனசிங்காவை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் நியமிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நிலைமை சீரானதும்
# பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் இயங்கும்

(கொழும்பு)

வடக்கில் நிலைமை சீரடைந்தவுடன் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி நேற்று கொழும்பில் கூட்டுத்தாபன ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்: தொழிற்சாலையை இடம் மாற்றும உத்தேசம் அரசுக்கு கிடையாது என்றும் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மாதாமாதம் சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# கம்பன் கழக இசைநிகழ்ச்சி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தினர் நல்லூர்ப் பெருவிழாக்காலத்தில் இசை அரங்கு நிகழ்ச்சியொன்றை நாளை 24ம் திகதி தொடக்கம் பதினேழு நாட்கள் தொடர்ந்து நடாத்தத் தீர்மானித்துள்ளார்கள்.

முதல் நிகழ்ச்சியாக கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் தவில் நாதஸ்வரக் கச்சேரி நாளை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிகள் நல்லூர் சுப்பவ கோட்ட மண்டபத்தில் தினமும் மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடக்கவுரையை ஆற்றுவார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மனோன்மணி அம்பாள் சந்நிதியில் மாதம் தோறும் நடைபெறும் பௌர்ணமி இசையரங்கில் பத்தாவது நிகழ்ச்சியாக இசைக்கச்சேரி நாளை சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் ஆர். கேதீஸ்வரன் நாதஸ்வரமும், எஸ் கேசவமூர்த்தி வயலினும். பி. முருகதாஸ் தவிலும், ஜி. கண்ணதாசன் மிருதங்கமும், எஸ். சிவராமன் தபேலாவும், தெ. உதயசங்கர் கெஞ்சிராவும் இசைப்பர்.

## இராசி பலன்

23 • 08 • 1991

வெள்ளிக்கிழமை

தமிழுக்கு ஆவணி 06

உத்தராடம் மு. ப. 8-50 வரை திரயோதசி மு. ப. 11-50 வரை, சித்தயோகம் இராகுகாலம் காலை 10-35 முதல் 12-05 வரை சுபநேரம் காலை 6-05 முதல் 7-35 வரை ஆவணி மூலம் வரலக்ஷ்மி விரதம்.

மேடம்: பெரியோர் புகழ், வாக்குவன்மை, தொழில் பாராட்டு.

இடபம: மறைமுகதொல்லை அசாதாரண பயம், மனவேதனை.

மிதுனம்; வழிப்பறி, புத்திரர் துன்பம் குடும்பமோதல்.

கடகம்: கல்விஞானம், குடும்பசுகம், நெடும்பயணம்.

சிங்கம்: இனசன நன்மை, அன்னியோன்யம், புகழ்.

கன்னி: விடாப்பிடி, கருத்து மோதல், அவமதிப்பு.

துலாம்: இடப்பெயர்வு குற்ற உணர்வு, குடும்பபிரிவு.

விருச்சிகம்: கண்ணில் ரோகம், பொதுப்பணி. வெற்றி

தனுசு: தொழில் பிணக்கு, வேண்டாத தொல்லை, கவலை.

மகரம்: தன்னம்பிக்கை, நற்செய்தி, தொழில்லாபம்.

கும்பம்: வைத்தியசெலவு, மாமனூர் துன்பம் மனக்குறை.

மீனம்: பயபக்தி, பணவரவு. காரியபலிதம், தானதர்மம்.

- ஜோஸ்யர்

## பிலிப்பைன்ஸ் வெள்ளப்பெருக்கில் 12 பேர் பலி

(மனிலா)

பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையையடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 12 பேர் பலியாகியுள்ளனர். பெருமளவு வீடுகள் சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் பணியில் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. [க]

## காஷ்மீர் பகுதியில 4 பேர் பலி 21 பேர் காயம்

(ஜம்முகாஷ்மீர்)

காஷ்மீர் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவமொன்றில் படையினர் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும் 13 படையினர் உட்பட 21 பேர் படுகாயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் இடம்பெற்ற பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் பலரை கைதுசெய்துள்ளதாகவும் ஆயுதங்கள் பலவற்றை மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மாணவர் சேமிப்புத் திட்டம்

[உடுவில்]

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் மாணவர் சேமிப்புத் திட்டம் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

முன்னர் சிலகாலம் நடைமுறையில் இருந்துவந்த மாணவர் சேமிப்புத் திட்டமுறை நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. தற்போது இத்திட்டம் மீண்டும் அமுல் செய்யப்பட்டுள்ளது. (109)

## தமிழ் அகராதி தயாரிக்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ் மாமன்றத்தினர் 'தமிழ் அகராதி' தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்மன்றத்தினர் புலவர்கள், பண்டிதர்கள், தமிழ் அறிஞர்களை நாடிச்சென்று ஆங்கில சொற்களுக்குரிய தனிததமிழ் சொற்களை சேகரித்து வருகின்றனர். [154]

# நள்ளிரவு வேளை ஓடு பிரித்து திருட்டு

[வட்டுக்கோட்டை]

நள்ளிரவு நேரத்தில் ஒட்டைப்பிரித்து உள்ளிறங்கிய திருடர் கோஷ்டி ஒன்று அங்கிருந்த மூவாயிரம் ரூபா பெறுமதியான நிவாரண உலர் உணவுப் பொருட்களைத் திருடிச் சென்றுள்ளது

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க 29 வது கிளையான சங்கரத்தைக் கிளையிலேயே இத்திருட்டுச் சம்பவம் கடந்த 16ம் திகதி நடைபெற்றுள்ளது.

திருடர் கோஷ்டி ஒன்று, திட்டமிட்டு இக்கிளையில் பல தடவை திருடியுள்ளார்கள். கடந்த மாதமும் இங்கு சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [139]


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சுகாதாரத்தொழிலாளர் (அமைய) பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது:

தகைமைகள்:

01. கல்வி: 7ஆம் வகுப்பில் சித்தி.
02. வயது; 18 வயது தொடக்கம் 40 வயது வரை.
03. யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் மேற்படி தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன் 31-08-1991ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 20-08-1991

(எ-1524)


# 300 தங்கச் சங்கிலிகள் கடத்தல் முயற்சி முறியடிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடந்த வாரம் தங்கச் சங்கிலி கடத்தல் முயற்சியை சுங்க அதிகாரிகள் முறியடித்தனர்.

இரு தமிழ் இளைஞர்கள் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தபோது சுங்க அதிகாரிகள் அவர்களை பரிசோதனை செய்தபோது அவர்களிடம் 300 தங்கச்சங்கிலிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பெறுமதி 7 லட்சம் ரூபாவென்று கூறப்பட்டது. இந்தச் சங்கிலிகளின் பெறுமதியே இவர்களுக்கு அபராதமாக விதிக்கப் பட்டது. (வி)

# ★ சோவியத் யூனியனில் சதிப் புரட்சியாளர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படும்

(மாஸ்கோ)

சோவியத் அதிபர் கொர்பச்சேவைப் பதவி கவிழ்க்கச் சதி செய்தவர்கள் கைதாகி வருகிறார்கள். முக்கியமாக அவசரகால கமிட்டியின் எட்டு உறுப்பினர்களில் ஆறு பேர் கைதாகியுள்ளனர்.

திரு: கொர்பச்சேவைப் பதவியிலிருந்து கவிழ்க்கச் சதி செய்த பாதுகாப்பு அமைச்சர் ஜிமிறி யசோவ், கே. ஜி. பி. உளவு விசாரணை அமைப்பின் தலைவர் விலாடிமிர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுக் கடும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தோல்வியடைந்த சதி முயற்சிக்குத் தலைமை தாங்கிய சோவியத் உப ஜனாதிபதி ஜெனடி ஜெனயோவும் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றும் சோவியத் பிரதம மந்திரி வலன்டின் பவ்லொவ் மருத்துவ மனையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சதித் திட்டத்தை நடத்திய தலைவர்களில் ஒருவரான உள்துறை அமைச்சர் போறிக்யுசோ கைதுசெய்வதைத் தவிர்க்க நேற்று தற்கொலை செய்துகொண்டார். அவரது மனைவி பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

மேலும் சதி முயற்சிகளுக்கு ஆதரவும் பங்கும் வகித்தவர்களென ஏழு பேர் ஏற்கனவே கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சதிமுயற்சியில் ஈடுபட்டவர்கள் தேசத் துரோகக் குற்றவாளிகளாகக் கணிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் குற்றவாளிகளாக நிரூபணமாகும் பட்சத்தில் இவர்களுக்கு மரண தண்டனைவிதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜீவ் கொலையின் போது அருகிலிருந்தவர்களுக்கு வர்மா ஹமிஷன் நோட்டீஸ்

(சென்னை)

ஸ்ரீ பெரம்புத்தூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதினத்தில் அருகிலிருந்த நீங்கள் நேரில் என்ன பார்த்தீர்கள் என்று கேட்டு ஜி. கே. மூப்பனார், மரகதம் சந்திரசேகரம், ஜெயந்தி நடராஜன் ஆகியோருக்கு நீதிபதி வர்மா கமிஷன் நோட்டீஷ் அனுப்பியுள்ளது.

ராஜீவ் வருகைக்கு இப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்த தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகளுக்கும் இக்கமிஷனால் நோட்டீஷ் அனுப்பப்பட்டுள்ளது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சங்கானை மாவடி மாஞ்சோலை ஸ்ரீ ஞான வைரவ மூர்த்திகோயில் ஆவணி ஓணத் திருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக மாலை 4 மணியளவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் 'ஞானவைரவர்' எனும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 6-ம் திகதி ஆனையிறவு முகாம் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் சுதாகர் (இராசதுரை சுகுமார், வளலாய் அச்சுவேலி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

* * *

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு மோதலில் கடந்த 4ம் திகதி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை அமலன் (தம்பிராசா சிவகணேசன் திருமலை) நேற்று வீரமரணமடைந்தார்.

'புலிகளின் குரல்' வானொலியின் ஒலிபரப்பு தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த அமலன் சிறந்த படப்பிடிப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரால் நடாத்தப்படும் ரி. ஏ சி. ஈ. பி இறுதிப்பரீட்சை நாளை சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறுமென மாநில இணைப்பதிகாரி அறிவித்துள்ளார். (எஸ்)

## பகுதிநேர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களிடமிருந்தும் ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்தும் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள்

விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தில் பெயர், முகவரி, வயது, கல்வித் தகைமைகள், தொழிற்றுறைத் தகைமைகள், பிற தகைமைகள் (அனுபவம்) வீட்டிலிருந்து பாடசாலையின் தூரம், விண்ணப்பிக்கும் பதவியைக் கோருவதற்கான விசேட கோரிக்கைகள் ஆகியவை குறிப்பிடுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மணித்தியாலத்திற்கு எண்பத்தைந்து ரூபாவும், பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கு ஐம்பது ரூபாவும் வழங்கப்படும். (152)

## சோனியா பயணம்

(யாழ்ப்பாணம்)

ராஜீவ் காந்தியின் மரணத்தின்பின்னர் திருமதி சோனியா காந்தி நேற்று முதல் தடவையாக வெளிநாடொன்றிற்கு பயணமானார்.

அவர் எந்த நாட்டிற்கு சென்றுள்ளார் என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை.

## ஆங்கில ஆசிரியர் பரீட்சை

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப்பரீட்சையில் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் கணித பாடத்தில் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் க. பொ. த. சாதாரண பரீட்சையில் தாய்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவற்றில் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்தோடு ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பதற்கான குறிப்பிட்ட தகமையும் அவசியமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே. வி. பி. தலைவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கைதானதையடுத்து இவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்மூலம் சிங்கராசா காட்டிலிருந்து தொகையான ஆயுதங்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். (எஸ்)

## பேச்சுவார்த்தைமூலம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் பிரச்னை நடைபெற்றுவருவது இந்தியாவுக்கு தொடர்ந்தும் கவலையளித்து வருகிறது. இவர்கள் இலங்கை திரும்பத் தகுந்த சூழ்நிலை ஒன்றை அந்நாட்டு அரசு ஏற்படுத்தவேண்டும்.

இவை தொடர்பாக இலங்கை அரசுடன் அதிகார பூர்வமாக பேச்சு நடத்திய போது விபரமாகத் தெரிவித்தோம். எல்லாத் தரப்பினரும் கலந்துபேசி இப்பிரச்னைக்குத் தீர்வுகாணவேண்டும் என்றார். (சி)

## புலிகளை நாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் கூறியுள்ளனர்.

மேலும் தமது பெயர்களை பதிவுசெய்யத்தவறி தற்போது சிறையிலிடப்பட்டுள்ள 2000 தமிழர்களை நாடுகடத்தவும் அரசு முயன்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மட்டு. கண்ணிவெடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாமிலிருந்து அம்பாறை பாலையடிவெட்டி நோக்கி உழவியந்திரத்தில் வந்த படையினர்மீது புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் பன்னிரண்டுஇராணுவத்தினர்கொல்லப்பட்டதுடன் உழவியந்திரமும் முற்றாகச் சேதமடைந்தது.

## இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு சூழ்நிலையை பெரிதும் பாதித்து வருகிறதென்றும் கூறினார். (சி)

## 300 புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். தமது காப்பரண்களிலிருந்து குதித்துவந்த 300 புலிகளுடன் படையினர் சிலமணி நேரம் நேரடியாக கைக்கு கை மோதிக்கொண்டதாக கூறினார்

நாங்கள் தகுதியான எதிரியுடனேயே மோதினோம். எமது துருப்பினர் புலிகளுடன் சளைக்காமல் போரிட்டனர் என யாழ். மாவட்ட தளபதி பிரிகேடியர் விஜய் விமலரட்ண தெரிவித்துள்ளார். (சி)

## அடுத்தமாதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 7 மாதங்களாக இடைநிறுத்தப்பட்ட இலவச உணவு முத்திரையும், வறியவர்களுக்கான ஜனசக்தித் திட்டமும் நடைமுறைக்கு வரும் இவ்வேளையில் தற்போது வேலையிழந்தவர்களுக்கும் புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலகத்தில் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நேற்று நடைபெற்ற உயரதிகாரிகள் மாநாட்டில் இம்முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதேவேளை தற்போது அகதிகள் முகாம்களில் இருப்பவர்களுக்குத் தொடர்ந்து இலவச உணவு விநியோகம் வழங்குவதென்றும், உணவு முத்திரைகளோ, ஜனசக்தியோ இல்லாத அனைவருக்கு, ப. நோ. கூ. சங்கக்கிளைகளில் பங்கீட்டு அட்டைகளுக்கு நிர்ணய விலைகளில் உணவுப் பொருட்களை வழங்கவேண்டுமெனவும் இந்த மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது. (வி)

## ஜனாதிபதி ஈ. பி. டி. பி சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் ஈ. பி டி.பி தூதுக்குழு ஒன்று சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இவர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

## சார்க் மாநாட்டிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளார். இம் மாநாட்டில் இலங்கை வரும் 7 நாட்டுத் தலைவர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## பேச்சுக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்த இலங்கை அரசு தானாகவே முயற்சிகளை மேற்கொள்ளாது. புதிதாக பேச்சுவார்த்தைதொடங்க யோசனை ஏதும் வரவேண்டுமாயின் அது முதலில் புலிகளிடமிருந்தே வரவேண்டும்.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு சமாதானத் தீர்வொன்றை காண அரசு விரும்புகிறது. அரசு படைகளுடன் தொடர்ந்தும் யுத்தம் புரிவதா அல்லது சமாதானப்பேச்சுகள் நடாத்த தயாரா என்பதை புலிகள் அறிவிக்கவேண்டும்.

அப்படிப் பேச்சுக்களுக்கு அவர்கள் தயாராயின் ஆயுதங்களை கைவிடவேண்டும்; சகல அரசியல் கட்சிகளுடனும் பேச இணங்கவேண்டும். முன் நிபந்தனை எதனையும் விதிக்கக் கூடாது. இவற்றுக்கு புலிகள் இணங்கினால் மட்டுமே பேச்சுக்கள் நடாத்த அரசு முன்வரும்.

பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளை அரசு ஏற்கனவே தளர்த்தியிருக்கிறது. மேலும் அவற்றை தளர்த்துவதென்ற பேச்சுக்கே இடமில்லை இனிமேல்இப்பிரச்னைக்கான பொறுப்பு விடுதலைப் புலிகளைப் பொறுத்ததே என்றும் கூறினார். (சி)

## மரண அறிவித்தல்



கொக்குவில் பொற்பதி

திருமதி

பொன்னம்மா சுப்பிரமணியம்

கொக்குவில் நாமகள் வித்தியாசாலையின் முன்னைநாள் சிரேஷ்ட ஆசிரியை திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் காலமானார். முன்னைநாள் அதிபர் ஆசிரியமணி ஆர். ரி சுப்பிரமணியத்தின் அருமை மனைவியாரும், குமாரமூர்த்தியின் (இத்தாலி) அன்புத் தாயாரும், திருமதி கமலகுமாரி குமாரமூர்த்தியின் (இத்தாலி) ஆசை மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் (கணவன்)

அ. வை. கனகரத்தினம்.

பொற்பதி வீதி, கொக்குவில். (சி-5171)

## கச்சதிவு விவகாரம்: ராமேஸ்வரத்தில் மீனவர் கிளர்ச்சி

(சென்னை)

''கச்சதீவில் மீன்பிடிக்க உரிமைபெற்று தரவேண்டும்'' எனக் கோரி ஆயிரம் மீனவர்கள் இராமேஸ்வரத்தில் கிளர்ச்சி செய்துள்ளனர்.

1974-ல் கச்சதீவு இலங்கை வசம் வந்தபின் இந்திய மீனவர்கள் இப்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை. 1974ற்குமுந்திய நிலையைபெற்றுத்தருமாறும் இவர்கள்கோரினர்.

இதற்கிடையில் கச்சதீவில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான பாதுகாப்பை அது தொடர்பான உடன்பாட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென இலங்கை அரசை இந்தியா கோரவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.